


Vol. 21 No. 2

February 2017


# இறையருள்


The Official Organ of the Diocese of Thuckalay


## Intelligizing the Mentally Challenged




**Making Visible the Unfathomable Love of God for the Last 25 Years**

ASEER VIDYALAYA

THETTIYODE




PONGAL

ST. ALPHONSA COLLEGE



MEET

MAJOR SEMINARIANS



FEST

CATECHISM BIBLE FEST

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 21 No : 2 FEBRUARY 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| திருத்தந்தையிடமிருந்து... | 05 |
| அருட்பணிப் பேரவை | 08 |
| மறைக்கல்வி | 11 |
| குழந்தை ஈசோ | 15 |
| சிறுமலர் | 16 |
| இல்வாழ்வு | 17 |
| B'days | 18 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 19 |
| வின்சென்ட் தே பவுல் | 20 |
| KKSSS | 22 |
| அன்பின் சங்கமம் | 23 |
| ஆசீர் வித்யாலயா | 24 |
| மறைமாவட்டச் செய்திகள் | 25 |
| Bishop's Engagements | 32 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/65/2017 31 January 2017

Greetings from Bishop's House, Thuckalay!

Ever since his election as the Pastor of the Universal Church, Pope Francis has been taking steps to renew the Church spiritually. He has already celebrated a number of Synods of Bishops to help the faithful to understand their respective roles in sanctifying the Church. Basing on the biblical quote "These things I have spoken to you, that my joy may be in you, and that your joy may be full" (Jn 15:11), Pope Francis expressed his mind on mission work of the Church as proclaiming the joy of the Gospel. Through the Synod of Bishops on the theme of New Evangelization and the subsequent post-Synodal Apostolic Exhortation Evangelii Gaudium Pope Francis has clearly spelled out the missionary nature of the Church. Similarly, through the two Synods of Bishops held on the theme of the family and the subsequent post-Synodal Apostolic Exhortation Amoris Laetitia, Pope Francis dwelt at length with the various aspects of family life among the Catholics.

Now Pope Francis wants to address the spiritual renewal of young people. He has already announced a Synod of Bishops on the theme "Young People, the Faith and Vocational Discernment." Through this Synod, Pope wants the Church to examine herself on how she can lead the young people to recognize and to accept the call to the fullness of life and love. He also intends to ask young people to help the Church in identifying the most effective ways of announcing the Good News in the present day. By listening to young people, Pope Francis believes that the Church will once again hear the Lord speaking in today's world. As in the days of Samuel (1 Sam 3:1-21) and Jeremiah (Jer 1:4-10), young people know how to discern the signs of our times through the outpouring of the Spirit. The vocation to love takes concrete form in everyday life through a series of choices, which finds expression in the states of life - marriage, ordained ministry, and consecrated life - young people opt. Likewise, the young people

need to be guided in choosing their way of life in the world through different professions, forms of social and civil commitments, lifestyles, management of time, use of money, etc. The purpose of vocational discernment is to find out how to transform them, in the light of faith, towards the fullness of joy to which everyone is called.

By announcing this Synod of Bishops, Pope Francis wants to tell us about the basis of the strength and beauty of young people, namely, the ability to rejoice at the beginning of undertakings, to give oneself totally without going back, to pick oneself up and begin again in search of new conquests. The riches of the Church's spiritual tradition provide many resources in guiding the formation of conscience, which will pave way for authentic freedom. The preparatory document to begin the Synod's phase of consultation of the entire People of God has been published. This document is addressed to the Synods and Councils of Patriarchs of the Eastern Catholic Churches sui iuris, the Episcopal Conferences, the dicasteries of the Roman Curia and the Union of Superiors General. The consultation intends to include all young people. For this, a website with a set of questionnaires on their expectations and their way of living has been launched.

These series of consultations will form the basis for drafting the work-document or Instrumentum Laboris, which will be the reference point in the discussion of the Synod Fathers. The preparatory document consists of three steps. It begins with some of the social and cultural dynamics of the world in which young people grow and make their decisions. The document then retraces the fundamental steps for discernment, which the Church feels, can be offered young people to discover, in the light of faith, their vocation. Finally, the document treats key points for a pastoral vocational programme for the youth.

We need to contribute our mite towards the success of the Synod as the young people of our Diocese also face situations similar to those faced by young people in other parts of the world. I shall keep you informed about the progress of the preparations for the Synod. Let us keep the coming Synod of Bishops in our prayers and make our young people aware of it!

**CONCLUSION**

On 27 February 2017, we begin the holy season of Lent. It is the

period of Great Fast (Sauma Ramba). The seven weeks before the solemnity of Easter are set apart for prayer, fasting, abstinence and reparation. The name 'Great Fast' (Sauma Ramba) signifies the great fast of Jesus for forty days in the wilderness before the beginning of his public life (Mt 4:2). Still we call this period as fifty days of fasting. This is because the St Thomas Christians fasted and abstained from Peth-urtha Sunday to Easter Sunday. Lent is a season to stop all the worldly pleasures and to return to God. This period motivates the faithful to enter into the process of being one with Jesus through his paschal mysteries of suffering, death, and burial as the bridal price of purification. I exhort you, dear Fathers, to prepare our people and to help them to enter into this holy season in the right spirit.

With my prayers and blessings.

+George Rajendran SDB

Bishop of Thuckalay

## புதூர் புலரி மெட்ரிக் பள்ளி ஆண்டுவிழா

புதூர் புலரி மெட்ரிக் பள்ளியின் 12வது ஆண்டுவிழா ஜனவரி 24 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாளாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். ஆசிரியர் மன்றச் செயலர் அருட்சகோதரி கிளோர் அறிக்கை



சமர்ப்பித்தார். ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி அதிக மதிப்பெண் பெற்றோருக்கான விருதையும், பெற்றோர் தினமன்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பெற்றோருக்கான பரிசையும் வழங்கினார். இடைக்கல் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. டி. சிதம்பரநாதன், புளியங்குடி அரசு பெண்கள் பள்ளி ஆசிரியர் திரு. பழனிச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவ மாணவிகள் தங்களின் வித்தியாசமான கலைத்திறன்களால் பார்வையாளர்களை மகிழ்வித்தனர். துணை முதல்வர் அருட்தந்தை பீட்டர்கிழக்கேல், அருட்தந்தை லிஜோ, பெற்றோர் பிரதிநிதி வழக்கறிஞர் மாலதி, அருட்சகோதரி விமலா றோஸ் சி.எம்.சி, அருட்சகோதரி ஷீமா எப்.சி.சி ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.




## உலக ஆயர்களின் 15 ஆவது மாமன்றத்திற்கான ஆயத்த ஆவணம் வெளியிட்ட போது, திருத்தந்தை இளைஞர்களுக்கு எழுதிய கடிதம்

**அன்புக்குரிய இளையோரே!**

2018, அக்டோபர் மாதத்தில் நடக்கவிருக்கும் உலக ஆயர் மாமன்றத்தின் மையப்பொருளாக "இளையோர், நம்பிக்கையும், அழைத்தலை தேர்ந்து தெளிதலும்," எனும் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**எனதருமை இளையோரே!**

அனைவருடைய கவனமும் உங்கள் பக்கம் திரும்ப வேண்டுமென நான் ஆசை கொண்டேன். காரணம், நீங்கள் என் நெஞ்சுக்கு நெருக்கமானவர்கள். வரவிருக்கும், ஆயர் மாமன்றத்திற்கான தயாரிப்புகளில் நீங்கள் ஈடுபடும் போது, இன்றைய தினம் நான் வெளியிடும் இவ் ஆவணம் ஒரு "திசைகாட்டியாக" அமையும் என நம்புகிறேன்.

இவ்வேளையில், ஆபிரகாமிடம் கடவுள் கூறியவற்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்: "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்" (தொநூ 12: 1). இதே வார்த்தைகளை இன்று கடவுள் உங்களிடமும் கூறுகின்றார்: "புறப்பட்டுச் செல்!" அது வெறுமனே வார்த்தைகள் அல்ல. உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்களோடு உடன்பயணிக்கும் தந்தையாகிய கடவுளின் பிரசன்னம். அவர் வார்த்தைகளில் நம்பிக்கைக்குரியவர்; வார்த்தை தவறுவதில்லை; கூறிய வார்த்தையை நிறைவடையச் செய்வார்; அவ்வார்த்தை, தூய ஆவியின் ஆற்றலாய், மூச்சுக்காற்றாய் உங்களுக்குள் செயலாற்றும்.

"புறப்பட்டுச் செல்" என்று ஆபிரகாமிடம் கடவுள் கூறிய வார்த்தையின் உள்ளர்த்தம் என்ன? குடும்ப வாழ்விலும்

உலக வாழ்விலும் ஈடுபடக்கூடாது என்னும் அர்த்தங்கள் அதற்குள் இல்லை. மாறாக, தனக்கென இருந்த அனைத்தையும் துறக்க வேண்டும், கடவுள் காட்டுகின்ற "புதிய நாட்டை" நோக்கிப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்னும் உள்ளர்த்தங்கள் தான் அவை. அவ்வார்த்தைகள் கடவுளின் ஆணையாக வந்தன; அதே வேளையில் சவாலாகவும் இருந்தன.

நாம் வாழும் இன்றைய காலகட்டத்தில், இப் "புதிய நாடு" எதைக் குறிக்கிறது?

**நீதி நிறைந்த தோழமையின் நாட்டை உருவாக்க இளையோர் மேற்கொள்ளும் முன்னெடுப்புகளையும் முயற்சிகளையும் குறிக்கின்றன என்றே நம்புகிறேன்.**

ஆனால் துரதிஷ்டவசமாக, இன்றைய உலகில், "புறப்பட்டு செல்" என்னும் வார்த்தை அதிகார மேட்டிமை, அநீதி, போர் எனும் போலியான அர்த்தங்களைப் பெற்றுள்ளன. வன்முறையின் உதவியோடு, இன்று மக்கள் சொந்த நாட்டிலிருந்து விரட்டப்படுகிறார்கள். இம்மக்களின் குரல் கடவுளை சென்றடைந்த வண்ணம் தான் இருக்கிறது. பாரவோனுக்கு அடிமைகளாக இருந்த இஸ்ரயேல் மக்களின் குரல் கடவுளின் சன்னிதியை சென்றடைந்ததைப் போன்று அக்குரல் கடவுளைச் சென்றடைகிறது (விப 2: 23).

ஒருமுறை சீடர்கள் இயேசுவிடம் வந்து, "ரபி நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்ட போது, "வந்து பாருங்கள்" என்று பதிலளித்தார். அன்பு மிக்க இளையோரே, இதே வார்த்தைகளை இயேசு உங்களைப் பார்த்தும் கூறுகிறார்; நீங்கள் அவருடைய பின்னால் செல்ல வேண்டுமென விரும்புகிறார்; அதற்காகவும் அழைக்கிறார்.

**உங்கள் மேல் அவருடைய பார்வை விழுவதை நீங்கள் கவனித்ததில்லையா? அவருடைய குரலொலி உங்கள் செவிகளில் விழுவதை உணர்ந்ததில்லையா? அவர்தம் குரலுக்கு செவிகொடுத்து அவரை பின்செல்ல வேண்டும் என்னும் உள்மனக்குரலை நீங்கள் கேட்டதில்லையா?**

உங்களை சுற்றி நடக்கும் குழப்பங்களுக்கும், செவிப்பறையை கிழியச் செய்யும் பல்வேறு குரல்களுக்கும் மத்தியில், மகிழ்ச்சியினுடையவும் மனநிறைவினுடையவும் குரலான ஆண்டவரின் குரல் உங்கள் இதயத்தின் ஆழத்தில் திரும்ப திரும்ப ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது என்பதை நான் அறிவேன். உங்களுக்கான ஆண்டவரின் திட்டத்தை, சிந்தனைத் தெளிவைத் தரும் நற்கல்வி மூலமும் உயத்துணர முடியும். ஒருவேளை, நீங்கள் தேர்ந்தெடுக்கும் பயணம் உறுதியற்றதாக இருக்கலாம்; வீழ்ச்சிகள் ஏற்படலாம், ஆனால், அங்கெல்லாம் கடவுளின் கரம் உறுதியாய் நின்று தாங்கி நிறுத்தும்.

கடந்த ஆண்டு கிராக்கோவில் நடந்த இளையோர் தின கொண்டாட்ட வேளையில், "மாற்றங்களை ஏற்படுத்த உங்களால்

முடியுமா?" என பல முறை கேட்டேன். அப்பொழுதெல்லம் நீங்கள் "முடியும்! முடியும்!!" என பதிலளித்தீர்கள். அக்குரல், துடிப்புமிக்க இளம் இதயத்திலிருந்து எழுந்தது. அவ்விதயம், அநீதிகளைக் கண்டு துவளாது. அது, "தூக்கி வீசும்" உலகமயமாக்கலின் மாற்றான் மனநிலை முன் வளைந்து கொடுக்காது. எரேமியா இறைவாக்கினர் உணர்ந்ததைப் போன்று "நான் சிறு பிள்ளையாயிற்றே" என்னும் அனுபவமின்மையின் ஆதங்கம் உங்களை மனம்தளரச் செய்யக்கூடாது. காரணம், "அஞ்சாதே. உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்" (எரே 1:8) என்னும் ஆண்டவரின் வாக்குறுதி உங்களோடு உண்டு.

உங்கள் முயற்சிகளாலும் மாற்றம் உருவாக்க விழையும் துடிப்பாலும், பெருந்தன்மையாலும் நல்லதோர் உலகை உங்களால் உருவாக்க முடியும். தீர்க்கமான முடிவுகளை முன்மொழியும் தூய ஆவியின் குரலுக்கு செவிமடுக்க நீங்கள் அஞ்ச வேண்டாம்! 'உன் தலைவராம் இயேசுவை பின்செல்' என்னும் துணிச்சல் மிக்க ஆணையை பிறப்பிக்கும் மனசாட்சியின் குரலுக்கு செவிகொடுங்கள்! காலம் தாழ்த்த வேண்டாம்!

உங்கள் குரல் ஒங்கி ஒலிக்க வேண்டும். திருச்சபையின் செவிகளில் விழுமாறு ஒலிக்க வேண்டும். அவை விமர்சனங்களாகவோ, உள்மன ஆதங்கங்களாகவோ, சந்தேகங்களாகவோ இருக்கலாம். அக்குரல் நீங்கள் சார்ந்துள்ள விசுவாச சமூகங்களில் ஒங்கி ஒலிக்கட்டும். அது, ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக உழைக்கும் பங்கு மேய்ப்பர்களின் செவிகளில் விழட்டும். முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் முன்னர், இளைஞர்களின் கருத்துக்களை ஆராய வேண்டும் என்று புனித பெனடிக்ட் துறவற மட அதிபர்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்: "ஆண்டவர், பல வேளைகளில் மிகவும் நல்லவற்றை இளையோருக்கே வெளிப்படுத்துகிறார்" (பெனடிக்ட் III, 3).

இச்சிந்தனையே ஆயர் மாமன்றத்திற்கான தாயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கும் எங்களையும் ஆட்கொள்கிறது. நானும் எனது சகோதர ஆயர்களும், "உங்கள் மகிழ்ச்சிக்காக உங்களோடு ஒத்துழைக்க" (1கொரி 1:24) அதிக அளவில் விரும்புகிறோம். உங்களைப் போல இளம் வயதினராக இருந்த நாசரேத் மரியாவிடம் உங்களை கையளிக்கிறேன். அவரை கடவுள் தமக்கு உகந்தவராக மாற்றினார். அத்தாய், "நான் ஆண்டவரின் அடிமை" (லூக் 1:38) என்றது போல் நீங்களும் கூற வேண்டும் என விரும்புகிறார். அந்நிலையை நீங்கள் அடைய உங்கள் கரங்களை அவரே பிடித்து வழிநடத்துவாராக.

தந்தைக்குரிய அன்புடன்
பிரான்சிஸ்
வத்திக்கான், ஜனவரி 13, 2017.

# தக்கலை மறைமாவட்ட அருட்பணிப்பேரவை

தக்கலை மறைமாவட்ட 5 -ஆம் அருட்பணிப்பேரவையின் 3 -ஆம் அமர்வு, பேரவைத்தலைவரும் ஆயருமான மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 16.01.2017 திங்கட்கிழமை தக்கலை சங்கமம் மார் மாத்யூ காவுகாட் அரங்கில் நடைபெற்றது.

வருகைப்பதிவுக்குப் பின் முற்பகல் 9.45 மணிக்கு அருட்தந்தை பெலிக்ஸ் சசு அவர்கள் தலைமையில் திருமதி. குளோரிபாய் அவர்கள் துணையோடு இறைவேண்டல் நடைபெற்றது. பின் பேரவைச் செயலர் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து பேரவை இணைச்செயலர் திரு.ஜாண் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து "மது இல்லா மறைமாவட்டம்" என்ற தலைப்பில் கோட்டாறு மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை முனைவர் நெல்சன் அவர்கள் கருத்துரை வழங்கினார். அவரது கருத்துரையில்,

மனிதன் மதுவைக் குடிக்கிறான்
மது மனிதனைக் குடிக்கிறது
நோய் மதுவில் அல்ல மூளையில்
மது கிண்ணத்தில் அல்ல மூளையில்
மதுப்பழக்கம் தந்திரமான, குழப்பமான ஒரு நோய்
மது நோய்க்கு யாரும் காரணமில்லை
மது நோயாளியை யாரும் கட்டுப்படுத்த முடியாது
மது நோயாளியை யாரும் குணப்படுத்த முடியாது
ஒருவர் குடிப்பதால் 28 பேர் பாதிக்கப்படுகிறார்கள்
குடிநோயாளி சக நோயாளியை உருவாக்குகிறான்
குடிநோயாளியின் மனைவி ஒரு விதவை

உட்பட பல்வேறு கருத்துகளை வழங்கினார்.

கருத்துரையின் இடையே திரு. ரமேஷ், திருமதி ஷீலா, திரு.செல்வராஜ் ஆகியோரின் அனுபவப் பகிர்வுகளும் நடைபெற்றன. தேநீர் இடைவேளைக்குப் பின்னரும் தொடர்ந்த கருத்துரைக்கு பின், ஆன்மீகக்குழு: மது இல்லா மறைமாவட்டம் உருவாக எல்லா மக்களும் விழிப்புணர்வு பெற

என்ன செய்யலாம்? என்ற வினாவின் அடிப்படையிலும், கல்விக்குழு: குடிநோயிலிருந்து வெளிவந்தவர்களின் தொடர் பராமரிப்புக்கு என்ன செய்யலாம்? என்ற வினாவின் அடிப்படையிலும் சமூகம் மற்றும் அரசியல் குழு: மக்கள் வாழ்வாதாரங்களை, வாழ்க்கையை சீரழிக்கும் குடிநோய் பற்றி அரசுக்கு எப்படி தெரியப்படுத்தப் போகிறோம்? மது விலக்கு கொண்டுவர அரசுக்கு பரிந்துரைகள் நாம் எப்படி எடுத்துச் செல்வது? என்ற வினா அடிப்படையிலும் நீதி மற்றும் பொருளாதாரக்குழு: குடிநோயினின்று மக்களை விடுவிக்க எந்த அமைப்புகளோடு நம்மை இணைத்துக் கொள்ளப் போகிறோம்? எப்படி அதனை நடைமுறைப்படுத்தலாம்? என்ற வினா அடிப்படையிலும் குழு விவாதங்கள் நடைபெற்றன.

பிற்பகல் 12.30 மணிக்கு தொடங்கிய சுழிய நேரம் 1.20 வரை தொடர்ந்தது. துறை தொடர்பான வினாக்களுக்கு துறை இயக்குநர்களும், பொதுவான வினாக்களுக்கு ஆயர் அவர்களும் பதில் கூறினர். அப்போது ஒத்தி வைக்கப்பட்ட வினாக்களுக்கு, பின்னர் ஆயர் தம் உரையின் போது விளக்கமளித்தார்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் திரு. எட்வின்சன், திரு. கிறிஸ்துதாஸ், திரு. றாபி, திரு. விஜயகுமாரன், திரு. சேவியர் பிரைட் ஆகியோர் தத்தம் குழுக்களின் விவாத அறிக்கைகளை சமர்ப்பித்தனர். பின் மது நோயிலிருந்து மக்களை மீட்டெடுக்க ஒரு தன்னார்வ குழு உருவாக்கப்பட்டது. அதில்

திரு. இராஜன் படந்தாலுமூடு, திரு.இரமேஷ் பள்ளிக்கோணம், திருமதி நிஷா மாலைக்கோடு, திரு. எட்வின்சன் பாலப்பள்ளம், திரு. மினி வர்கீஸ் மார்த்தாண்டம், திரு. வர்கீஸ் அணமுகம், அருட்சகோதரி சீலியா, திருமதி ஹேமா கிள்ளியூர், திரு. ஞானதாஸ் முழுக்கோடு, அருட்சகோதரி ஆன்சிஸ், அருட்சகோதரி அல்போன்ஸ், அருட்தந்தை பெலிக்ஸ், அருட்தந்தை சந்தோஷ், அருட்தந்தை மிஜோ புத்தன் புரைக்கல், அருட்தந்தை அகஸ்டின் தலோடில், அருட்தந்தை பீட்டர் கிழக்கேல், அருட்சகோதரி அனு, திரு. செல்வராஜ் பென்கிரி, திருமதி ரமுனா முழுக்கோடு, திருமதி அழகம்மாள் மேக்கரை, திரு. அஜு தோமஸ் ஆறுகாணி ஆகியோர் தன்னார்வத்தோடு தங்களை குழுவில் இணைத்துக் கொண்டனர்.

கருத்துரை மற்றும் அது தொடர்பான நிகழ்வுகளை அருட்பணிப்பேரவை நெறிக்குழு தலைவர் அருட்தந்தை பெலிக்ஸ அவர்கள் நெறிப்படுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற ஆயர்

உரையில்,

• நமது மறைமாவட்டத்தில் தற்கொலை செய்து எவரேனும் இறக்க நேர்ந்தால் அவர்களின் நல்லடக்கத்துப் பதிலாக என்னென்ன செய்யலாம் என்ற நடைமுறைகள் அனைத்து பங்கு குருக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

• பங்களவில் மாதத்தில் ஒருமுறையாவது தியானம் வேண்டும் என்ற யோசனைக்கு பங்குகளே முடிவெடுத்துக் கொள்ளலாம்.

• சீரோ மலபார் திருச்சபை தனித்திருச்சபையாக உயர்வு பெற்றதன் வெள்ளிவிழாவை இவ்வாண்டு கொண்டாடி வருகிறது.

• சீரோ மலபார் உயர் பேராயப் பரிந்துரைகள் செயல்படுத்துவதற்கான நடைமுறைகள் விரைவில் அறிவிக்கப்படும்.

• நம் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும்.

• புதிதாக தெரிவு செய்யப்பட்ட போதை ஒழிப்பு தன்னார்வ குழுவினருக்கு வாழ்த்துக்கள்.

உட்பட்ட கருத்துக்களை கூறினார்.

தொடர்ந்து அருட்தந்தை சஜீ எலம்பாசேரில் அவர்கள் புனித குழந்தை தெரசா நோய் தணிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவின் செயல்முறைகள் பற்றி விளக்கிக் கூறினார். அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் திருத்தொண்டு குழுவின் மறைமாவட்ட, மறைவட்ட, பங்களவு செயல்பாடுகள் மற்றும் திருத்தொண்டு நிதி பற்றி கூறியதோடு புலரி கம்யூனிகேஷன் சார்பில் நடைபெறும் கலைநிகழ்வுகளையும், விரைவில் 'அபிமிலக்' என்ற விவிலிய நாடகமும் 'கோமஸ்வரி' என்ற சமூக நாடகமும் வெளிவர இருக்கின்றன என்றும், ஒரு இன்னிசைச் குழு அமைய இருக்கிறது என்ற செய்தியையும் கூறினார். அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் 'இறையருள்' மற்றும் 'சீனாய்' இதழ் பற்றி எடுத்துக் கூறியதோடு, மறைமாவட்ட வலைதளம் பற்றியும் கூறினார். அருட்தந்தை அலக்ஸ் அவர்கள், மறைமாவட்டத்தின் சார்பில் திருமணத் தகவல் நிலையம் கல்லுவிளையில் அமைக்கப்பட்ட செய்தியைக் கூறினார். அடுத்த அருட்பணிப்பேரவை 01.05.2017 மே தினத்தன்று நடைபெறும் என செயலர் அறிவித்தார். நிறைவில் திருமதி ஹேமா நன்றி கூற ஆயர் அவர்களின் இறுதி ஆசியோடு கூட்டம் மாலை 4.00 மணிக்கு இனிதே முடிவுற்றது.

அருட்தந்தை மிஜோ
புத்தன்புரைக்கல்
பேரவைச்செயலர்



# CATECHISM
# மறைக்கல்வி

"நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப் பட்டவர்கள். அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்"

(கொலோ 3:12)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துகள்.

**மறைமாவட்ட கலைப்போட்டிகள்**

2016-2017 ஆம் ஆண்டு மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகள் ஜனவரி 14 சனிக்கிழமை படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் பளுகல் மறைக்கல்வி மாணவிகளின் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. மறைக்கல்வி ஊக்குவிப்பாளர் திரு. செல்வகுமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். குருகுல முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி கலைவிழாவை தொடங்கி வைத்தார். இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்க, ஊக்குவிப்பாளர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் போட்டிகளுக்கான விதிமுறைகளையும் தகவல்களையும் எடுத்துரைத்தார். ஆறு மறைவட்ட தளங்களும் ஒவ்வொரு வண்ணக் கொடியை ஏந்தி வரிசையாக நின்றனர். ஊக்குவிப்பாளர் திரு வின்செண்ட்ராஜ் அவர்கள் நன்றி கூறினார். பின் காலை 10 மணிமுதல் 4 மணி வரை 6 அரங்குகளில் போட்டிகள் நடைபெற்றது. மொத்தம் 370 மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவில் குருகுல முதல்வர் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். அதிக புள்ளிகளைப் பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன. இறுதியாக இயக்குநர் அவர்கள் நன்றி கூற களியல் மறைக்கல்வி நிலையத்தாரின் பாப்பரசர் கீதத்துடன் நிறைவு பெற்றது.

மறைமாவட்ட அளவில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் விபரம்:

| Sl No | Name of the Sunday School | Points | Rank |
|---|---|---|---|
| 1 | Manjalumoodu, Little Flower | 51 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 2 | Vayalinkarai, St. Antony | 32 | 2 |
| 3 | Malaicode, Holy Cross | 25 | 3 |
| 4 | Nithiravilai, JayaMatha | 21 | 4 |
| 5 | Muzhucode, St. Thomas | 20 | 5 |
| 6 | Soosaipuram, St.Joseph | 20 | 5 |
| 7 | Padanthalumoodu, Sacred Heart | 19 | 6 |
| 8 | Killiyoor, Deva Matha | 17 | 7 |
| 9 | Mukkuttukkal, Holy Family | 16 | 8 |
| 10 | Varuthattu, St. Xavier | 16 | 8 |
| 11 | Palukal St. Thomas | 16 | 8 |
| 12 | Mankarai, St. James | 16 | 8 |
| 13 | Netta, St. Thomas | 15 | 9 |
| 14 | Palappallam, Christ the King | 15 | 9 |
| 15 | Kaliyal, St. Mary | 14 | 10 |
| 16 | Nagercoil, St. Alphonsa | 14 | 10 |
| 17 | Pallikonam, Sacred Heart | 13 | 10 |
| 18 | Kazhuvanthittai, St. Martin De Porus | 13 | 11 |
| 19 | Arukany, Holy Family | 10 | 12 |
| 20 | Athencode, St. Maria Goretti | 9 | 13 |
| 21 | Munchirai, St. George | 8 | 14 |
| 22 | Cheenivilai, Amala Maria | 6 | 15 |
| 23 | Pathukany, St. Thomas | 5 | 16 |
| 24 | Mezhacode, St. Franchis Assisi | 5 | 16 |
| 25 | Anamugham, Loretto Matha | 4 | 17 |
| 26 | Annikkarai, St. Mathew | 4 | 17 |
| 27 | Pilankalai, Little Flower | 4 | 17 |
| 28 | Pilankarai, Loretto Matha | 4 | 17 |
| 29 | Marthandam, St. Vincent De Paul | 3 | 18 |
| 30 | Karode, St. Joseph | 1 | 19 |
| 31 | Thettiyode, St. Paul | 1 | 19 |
| 32 | Thuckalay, St. Mary | 1 | 19 |

**மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகள்**

2016-2017 ஆம் ஆண்டு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு படந்தாலுமூடு மறைவட்ட ஆலய வளாகத்தில் இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் தலைமையில் தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. முற்பகலில் மஞ் சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும், மதியம் 1 மணிக்கு மறைமாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினா போட்டியும் பிற்பகல் 2 மணி முதல் ஆறுகாணி, சூசைபுரம், தக்கலை&பிலாங்காலை மறைவட்டங்களுக்கும் நடைபெற்றன. போட்டிகள் 3 அரங்குகளில் நடைபெற்றன. மொத்தம் 400 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மறைவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற விபரங்கள் பின்வருமாறு:**

**ஆறுகாணி மறைவட்டம்**

| வ.எண் | மறைக்கல்வி நிலையம் | புள்ளிகள் | இடம் |
|---|---|---|---|
| 1 | பத்துகாணி | 27 | I |
| 2 | ஆறுகாணி | 14 | II |
| 3 | மேழக்கோடு | 6 | III |
| 4 | அணமுகம் | 4 | |

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | களியல் | 18 | I |
| 2 | முக்கூட்டுக்கல் | 16 | II |
| 3 | மஞ்சாலுமூடு | 7 | III |
| 4 | முழுக்கோடு | 5 | |
| 5 | மாலைக்கோடு | 4 | |
| 6 | மாறப்பாடி | 2 | |

**நித்திரவிளை மறைவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | நித்திரவிளை | 15 | I |
| 2 | முஞ்சிறை | 14 | II |
| 3 | வாறுதட்டு | 8 | III |
| 4 | கிறிஸ்துராஜபுரம் | 7 | |
| 5 | வயலின்கரை | 5 | |

| | | | |
|---|---|---|---|
| 6 | சீனிவிளை | 3 | |

படந்தாலுமூடு மறைவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பளுகல் | 19 | I |
| 2 | தெற்றியோடு | 12 | II |
| 3 | அண்ணிக்கரை | 7 | III |
| 4 | படந்தாலுமூடு | 6 | |
| 5 | அதங்கோடு | 5 | |
| 6 | கழுவன்திட்டை | 3 | |

தக்கலை&பிலாங்காலை மறைவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் | 16 | I |
| 2 | பிலாங்காலை | 12 | II |
| 3 | காட்டாத்துறை | 12 | II |
| 4 | கைசாலவிளை | 6 | III |
| 5 | பரைக்கோடு | 6 | III |
| 6 | மாறப்பாடி | 2 | |

சூசைபுரம் மறைவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1 | சூசைபுரம் | 16 | I |
| 2 | தக்காளிவிளை | 11 | II |
| 3 | பாலப்பள்ளம் | 10 | III |
| 4 | மாங்கரை | 9 | |
| 5 | கிள்ளியூர் | 6 | |

அருட்தந்தை அலக்ஸ், இயக்குநர்

## வரவிருக்கும் நிகழ்வுகள்

09.02.2017- பேரருட்தந்தை பிலிப் கொடியந்தற அவர்களின் நினைவுத் திருப்பலி, படந்தாலுமூட்டில் வைத்து மாலை 6 மணிக்கு நடைபெறும். 10.02.2017- பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களின் தாய்ப்பங்கான காயல்புறத்தில் வைத்து நினைவு திருப்பலி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

13.02.2017 - எஸ்.டி.எஸ் அருட்சகோதரிகளின் ஜூபிலி, மஞ்சாலுமூடு
14.02.2017 - அருட்தந்தையர் கூட்டம்
16.02.2017 - பல்வேறு இயக்கங்களின் இயக்குநர்களுக்கான கூட்டம்
26.02.2017 - மறைக்கல்வி, விவிலிய வினாடி வினா - படந்தாலுமூடு
27.02.2017 - சாம்பல் திங்கள்

# தொன் போஸ்கோ
## திறன் வளர் பயிற்சி நிறுவனம்
## உத்தரங்கோடு

Don Bosco Tech
Skilling India

தொன் போஸ்கோ திறன் வளர் பயிற்சி நிறுவனமும் (DBTech) தக்கலை மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் இளையோர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது ஓசானாம் உயர்கல்வி நிலையத்தில் 11.10.2016 முதல் 08.01.2017 வரை நடைபெற்றது. டி.றி.பி பிரிவில் 22 பேரும், டேலி பிரிவில் 29 பேருமாக மொத்தம் 51 பேர் பயிற்சி பெற்றனர். இது வரை மொத்தம் 21 பேர் பல்வேறு நிலையங்களில் வேலைவாய்ப்பு பெற்றனர்.



அடுத்த வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தொடர்புக்கு: திரு.சௌந்தரராஜ், மையத் தலைவர். 04651-209333, 9442829980

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு"(திரு: 136:1)

HOLY CHILDHOOD திருக்குழந்தை ஈசோ

**ஊக்குவிப்பாளர் கூடுகை**

குழந்தை ஈசோ இயக்க ஊக்குவிப்பாளர் கூடுகை ஜனவரி 21 சனிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் கல்லுவிளையில் நடைபெற்றது. இயக்குநர் தலைமையில் நடைபெற்ற இக்கூடுகையில் பரிசுக் குலுக்கல் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

**மறைவட்ட போட்டிகள்**

மறைவட்ட போட்டிகள் 05.02.2017 அன்று ஆறுகாணி மறைவட்டத்திற்கு ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில்வைத்தும், மற்ற 5 மறைவட்டங்களுக்கு 11.2.2017 அன்று கல்லுவிளை அலுவலக வளாகத்தில் வைத்தும் நடைபெறும்.

**தகவல்கள்**

கருத்தரங்குகள் நடத்தப்படாத பங்குகளில் விரைந்து கருத்தரங்கை நடத்த வேண்டும்.

மார்ச் 25 மதியம் 2மணிக்கு கல்லுவிளை அலுவலகத்தில் குலுக்கல் நடைபெறும்.

ஜூன் 3 அன்று ஆண்டு விழா நடைபெறும்.

அருட்தந்தை ஜோமோன்
இயக்குநர்

# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

சிறுமலர்
MISSION LEAGUE

**வினாடி வினா போட்டி**

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் மறைமாவட்ட வினாடி வினா போட்டி 15.01.2017 அன்று மதியம் கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெற்றது.



போட்டியை இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் செபித்து தொடங்கி வைத்தார். ஆறு சுற்றுக்களாக போட்டி நடைபெற்றது. முதல் பரிசான ரூ. 3000/- த்தை காட்டாத்துறை ஆஸ்லின் வர்சாவும், இரண்டாம் பரிசான ரூ. 2000/-த்தை வயலின்கரை ஜெபிஷாவும், மூன்றாம் பரிசான ரூ. 1000/-த்தை முஞ்சிறை ஜோஸ்பினும் தட்டிச்சென்றனர். பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுக்கள்.

**தியானம்**

நித்திரவிளை மறைவட்ட மாணவர்களுக்கான ஒருநாள் தியானம் 29.01.17 அன்று மதியம் 2.00 மணியளவில் நித்திரவிளை ஜெயமாதா கலையரங்கில் இயக்குநர் தந்தை அவர்களின் இறைவேண்டலுடன் ஆரம்பமானது. தியானத்தின் முதல் அமர்வை அருட்சகோ. தீபா எஸ்.டி அவர்கள் இயக்கத்தின் நோக்கம், தோற்றம், வளர்ச்சி,



பயன் என்னும் சிந்தனையில் செயல் விளக்கப் படங்களோடு எடுத்துரைத்தார். இரண்டாம் அமர்வு துறவற அழைப்பு என்னும் சிந்தனையில் எஸ்.எம். எஸ்.எம், எஸ்.டி, எ.எஸ்.எம்.ஐ அருட்சகோதரிகளும், இணை இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும் தனது இறையழைத்தலின் அனுவத்தை எடுத்துரைத்தனர். இத்தியானத்தில் வட்டார இயக்குநர் அருட்தந்தை மிஜோ மற்றும் அருட்தந்தை அஜீஷ் ஆகியோரும் உடனிருந்தனர். சுமார் 175 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை ஷோஜோ, இயக்குநர்



FAMILY APOSTOLATE

## குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையம் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி மேரி ஜாய்ஸ் அவர்களின் சகோதரியான அருட்சகோதரி பிளைஸ் எச்.எப்.எஸ், அவர்கள் ஜனவரி 24 அன்று இறைபதம் சேர்ந்தார். 25 அன்று நடைபெற்ற அன்னாரின் அடக்க நிகழ்விற்கு மையம் சார்பில் ஆறு பேர் கலந்து கொண்டு ஆறுதலளித்தனர்.

**திருமண தயாரிப்பு பயிற்சி**

2017 ஜனவரி மாதம் நடைபெற்ற பயிற்சியில் 20 பேர் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அடுத்த பயிற்சி 2017 மார்ச் 17, 18, 19 ஆகிய நாட்களில் சங்கமத்தில் நடைபெறும். பயிற்சி கட்டணம் ரூ750/-

**மாதர் ஜோதிஸ்**

மாதர் ஜோதிஸ் இயக்க ஆண்டுவிழா 2017 ஜனவரி 8 ஞாயிறு மதியம் 2 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெற்றது. சுமார் 300 மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். சிறந்த அலகாக கைசாலவிளை, புனித சவேரியார் அலகும், சிறந்த இயக்குநராக அருட்தந்தை ஷேஜோ அவர்களும், சிறந்த வழிகாட்டியாக அருட்சகோதரி லீமா றோஸ் எஸ்.டி.எஸ் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. திருமண உதவித்தொகை ரூ.30,000 களியல் செல்வி. நீனா அவர்களுக்கு வழங்கப்பட்டது. கதைபிரசங்கம் போட்டியில் முதல்பரிசை நாகர்கோவில் அலகும், இரண்டாம் பரிசை முக்கூட்டுக்கல் அலகும், மூன்றாம் பரிசை மேழக்கோடு அலகும் பெற்றன. வில்லிசைப்பாட்டு போட்டியில் முஞ்சிறை அலகு முதல்பரிசையும், முக்கூட்டுக்கல் அலகு இரண்டாம் பரிசையும், கைசாலவிளை மூன்றாம் பரிசையும் பெற்றன. பங்கேற்ற அனைத்து அலகுகளுக்கும் ஊக்கப்பரிசு வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டிற்கான போட்டிகள்

**மேனோ ஆக்ட்-ஒருவர் மட்டும் 6 நிமிடம், தலைப்பு: விவிலிய நிகழ்ச்சி**

**நாடகம்: சமூக சிந்தனை, நேரம்:12 நிமிடம், அதிகபட்சம் 5 பேர்**

- அதிக செயல்பாடுகள் கொண்ட அலகிற்கு பரிசுகள் வழங்கப்படும். (பங்குகளில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில்)
- பங்குகளில் புதிதாக இணையும் குடும்பங்களை வரவேற்று உபசரித்தல்.
- நிகழ்சிகளின் தொகுப்பு இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்.

### வந்து பாருங்கள் செபக்குழு

வந்து பாருங்கள் செபக்குழுவின் சார்பில் பளுகல் பங்கில் நடைபெற்ற 116-ம் ஒருநாள் தியானத்தை ஆலப்புழ சகோதரர் ஆல்பின் வழிநடத்தினார். அடுத்த தியானம் பிப்ரவரி 11 சனிக்கிழமை நடைபெறும்.

### தசாம்சா கிளப்

தசாம்சா கிளப்பின் டிசம்பர் மாத கூடுகை ஜனவரி 15 அன்று டோம் நெட்டகுண்டு அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தசம பாகமாக கிடைக்கப்பட்ட தொகையிலிருந்து இதுவரை 7 இலட்சம் ரூபாய் உதவிகள் வழங்கப்பட்டன. அடுத்தக் கூடுகை பிப்ரவரி இரண்டாம் ஞாயிறன்று கழுவன்திட்டை திரு. இராஜசேகரன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். இதில் இணைய விரும்புவோர் இத்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்- அருட்தந்தை. ஜோசப் நெடும்புறம், 9486856029.

### தந்தையர் நல்வாழ்வு இயக்கம்

மாலைக்கோடு அலகு, தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தின் கூடுகை ஜனவரி 29 அன்று இடவிளாகம் திரு. தாசையன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. காரோடு ஆலயத்தில் தந்தையர்களுக்கு சிறப்பு கருத்தரங்கு நடத்தி ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்பட்டது. 40 தந்தையர்கள் கலந்துகொண்டனர்.

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம்,
இயக்குநர்.

## Birthdays of Fathers - February

1. Fr. Jose Vayalil
7. Fr. Shojo Erupathanchilchira
9. Fr. Linslal Mangalath
15. Fr. Jinu Thekkethalackal
21. Fr. Seby Manimalakandathil
22. Fr. Jipson Chully MCBS
25. Fr. Peter Kizhakeyil
28. Fr. Joshy Kulathunkal
28. Fr. Prince Maliyil

## அருட்சகோதரர்களிடமிருந்து...

கிறிஸ்மஸ் விடுமுறையில் அருட்சகோதரர்கள் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய பணிகள் சிறப்பாக அமைந்தது என அருட்சகோதரர்களின் வழிகாட்டி அருட்தந்தை ஜெஸ்டின் மற்றும் மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் ஆகியோர் பாராட்டி நன்றியை தெரிவித்தனர். தங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை சிறப்புற செய்து முடித்த பின் டிசம்பர் 31 அன்று தங்கள் இல்லங்களுக்கு சென்று புத்தாண்டை கொண்டாடினர். பின் ஜனவரி 5 அன்று தங்கள் குருத்துவ கல்லூரிகளுக்கு சென்று சேர்ந்தனர். உஜ்ஜயின் குருமட மாணவர்கள் தங்கள் குருமடங்களிலே கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை கொண்டாடினர். தற்போது 2016-2017 கல்வியாண்டின் இறுதிகட்ட குருத்துவ பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திகொள்கின்றனர். தேர்வுகள் வரும் பிப்ரவரி 19 அன்று முதல் கோட்டயம், ஆலுவா, குந்நோத், திருச்சூர் ஆகிய குருத்துவக்கல்லூரிகளிலும், மார்ச் மாதம் உஜ்ஜயின், சாத்னா, வாரங்கல் மற்றும் பெங்களூர் குருத்துவக் கல்லூரிகளிலும் நடைபெற இருக்கிறது. அனைவரும் தேர்ச்சிபெற வாழ்த்துகள்.

அனைத்து குருத்துவக் கல்லூரிகளிலும் தனஹா மற்றும் குடியரசு தின விழாக்கள் கொண்டாடப்பட்டது. திருச்சூர் அருட்சகோதரர்கள் இன்னிசை நிகழ்வை ஒருங்கிணைத்தனர். டிசம்பர் மாதம் தாங்கள் பணிபுரிந்த இருபங்குகளில் நடத்தப்பட்ட தியானத்தின் தொடர்சியாக அப்பங்குமக்களை சந்தித்து அவர்களோடு ஒருநாள் கலந்துரையாடி மகிழ்விக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

திருத்தொண்டர்கள் வினு மற்றும் ஜாண் ஆகியோர் தங்கள் திருத்தொண்டுதளங்களில் நன்முறையில் பணியை தொடர்கின்றனர். தங்களின் குருத்துவ அருட்பொழிவிற்கான தயாரிப்புகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அருட்சகோ. ஜெபனேஷ்,
தலைவர்.



# VINCENT-DE-PAUL
# வின்செந்தியர்



### சூசைபுரம் வட்டார சபை

சூசைபுரம் புனித சூசையப்பர் கிளைச்சபையின் உறுப்பினர்கள் ஆன்மீக ஆலோசகர் பேருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் பெருஞ்சிலம்பு இறைபராமரிப்பு இல்லம் சென்று சந்தித்து உதவியாக ரூ.9,000/- மற்றும் 52 கிலோ மரவள்ளிக் கிழங்கும் வழங்கினார்கள்.

கிள்ளியூர் புனித அன்னைத் தெரசா பெண்கள் கிளைச்சபை உறுப்பினர்கள் மற்றும் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும் இணைந்து நோயாளிகளை சந்தித்து செபித்தனர்.

### நித்திரவிளை வட்டாரசபை

நித்திரவிளை வட்டார சபை சார்பாக சுமார் 25 வின்செந்தியர்கள் இணைந்து 21.1.2017 அன்று காலை 7 மணியளவில் திருப்பயணம் மேற்கொண்டனர். அரைப்பள்ளி, வட்டம், காற்றாடிமலை வடக் கன்குளம், கள்ளிக்குளம், திருக் கல்யாணமாதா கோவில், உவரி போன்ற புனித தலங்களுக்குச் சென்று செபித்தனர். வட்டாரசபைத் தலைவர் சகோ ஜோஸ் அவர்கள் முன்னின்று வழிநடத்தினார். மேலும் விபத்தில் படுகாயமடைந்த ஒருவரை சந்தித்து நித்திரவிளை ஜெயமாதா கிளைச்சபை சார்பில் ரூ.2000/- உதவி வழங்கினர்.

### களியல் வட்டாரசபை

பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்தில் செயல்பட்டு வரும் மூன்று கிளைச்சபைகள் இணைந்து 22.12.2016 அன்று பெருஞ்சிலம்பு இறைபராமரிப்பு இல்லம் சென்று கிறிஸ்மஸ் கொண்டாடினர். அருட்தந்தை சாக்கோ சி.எம்.ஐ அவர்கள் தலைமையில் ரூ10,000/- மற்றும் பொருட்களுள் வழங்கப்பட்டது.

### படந்தாலுமூடு வட்டார சபை

அண்ணிக்கரை புனித மத்தேயு கிளைச்சபையின் புதிய பொறுப்பாளர்கள் பணியேற்பு 08.01.2017 அன்று அவ்வாலயத்தில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புதிய தலைவராக சகோ. செல்வராஜ், துணைத்தலைவராக சகோ. ஜாண்சன், செயலராக சகோ. ராஜேஷ், பொருளராக சகோ. ராபர்ட் பால் ஆகியோர்கள் பணியேற்றுக்கொண்டனர். மத்தியசபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை மற்றும் இளைஞர் பிரதிநிதி சகோ. ஷாஜன் அவர்கள் கலந்துகொண்டு உறுதிமொழி சொல்லி பணியேற்பு பிரமாணம் செய்து வைத்தனர். நிறைவில் ஆன்மீக ஆலோசகர் அவர்கள் ஆசி வழங்கினார்.

**மஞ்சாலுமூடு வட்டார சபை**

மாலைக்கோடு புனித அகஸ்தினார் பெண்கள் கிளைச் சபையினர் 5 ஏழைக்குடும்பங்களை சந்தித்து செபித்தனர்.

மஞ்சாலுமூடு புனித லூர்து மாதா பெண்கள் கிளைச்சபை ரூ. 600/-ம் புனித குழந்தை தெரசாள் கிளைச்சபையினர் ரூ. 5000/-மும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவருக்கு வழங்கினர்.

முக்கூட்டுக்கல் புனித மரியன்னை பெண்கள் கிளைச்சபையினர் புற்றுநோயாளி ஒருவருக்கு உதவியாக ரூ. 3000/- வழங்கினர். புனித திருச்சிலுவை கிளைச்சபையினர் இருவருக்கு மருத்துவ உதவியாக ரூ. 1000/-மும், ஏழை ஒருவரின் இல்ல கூரை அமைக்க ரூ 3,700/-ம் வழங்கினர்.

பென்கிரி புனித பெனடிக்ட் ஆண்கள் சபையினர் புற்று நோயாளிக்கு ரூ. 2000/- உதவியாக அளித்தனர்.

காரோடு புனித சூசையப்பர் கிளைச்சபையினர் தங்கள் ஆலய மதுபகா பணிக்காக ரூ. 25,000/- வசூல் செய்து கொடுத்தனர். தத்துக் குடும்பங்களுக்கு ஆடைகளும் வழங்கினர்.

**திட்ட உதவி வழங்குதல்**

தெற்றிவிளை புனித மிக்கேல் கிளைச்சபை சார்பில் 4-வது சுழற்சியாக திட்ட உதவிகள் 29.01.2017 அன்று வழங்கப்பட்டது. ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை வினோத் அவர்கள் தலைமையில் ரூ. 10,000/- வீதம் 8 நபருக்கு மொத்தம் ரூ.80,000/- வழங்கப் பட்டது. வட்டாரசபைத் தலைவர் சகோ. விஜயராஜ் அவர்கள் உடனிருந்தார்.

சகோ ஷாஜன்,
செய்தி தொடர்பாளர்.

**மைசூர் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமனம்**

மைசூர் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் தாமஸ் ஆன்டனி வாழப்பில்லி அவர்கள் பணி ஒய்வு பெற விழைந்து அனுப்பிய விண்ணப்பத்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜனவரி 25 புதனன்று ஏற்றுக்கொண்டு அம்மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மைசூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணி கன்னிகதாஸ் வில்லியம் ஆன்டனி (Kannikadass William Antony) அவர்களை ஜனவரி 25 அன்று நியமித்தார். அருள்பணி வில்லியம் ஆன்டனி அவர்கள், புனித யோசேப்பு ஆலயத்தின் பங்கு அருள்பணியாளராகவும், அம்மறைமாவட்டத்தின் செய்தித் தொடர்பாளராகவும் பணியாற்றியவர்.

76 வயது நிறைந்த ஆயர், வாழப்பில்லி அவர்கள், 2003ம் ஆண்டு முதல், மைசூர் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றியவர்.



### குழந்தைகளில் திறமைகளின் தேடல்

குழந்தைகளின் திறமையை கண்டறிந்து பட்டை தீட்டும் ED-UCARE உறுப்பினராயிருக்கும் மாணவர்களுக்கான பயிற்சி



ஜனவரி 16, 17 தேதிகளில் நடைபெற்றது. 67 மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். வகுப்புகள் ஆங்கில மொழி பேசும் திறமையை வளர்க்கும் விதமாக நடைபெற்றது.

### பொருளாதாரம் உயர...

அனைவரும் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையவேண்டும் என்ற எண்ணத்தில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் சுழற்சி முறையில் கோழிப் பண்ணை அமைக்க முதற் கட்டமாக கல்லுவிளை, மாங்கரை, சேவிளை ஆகிய ஊர்களில் 30 பயனாளிகளுக்கு கோழிப்பண்ணை அமைக்க கோழிக்கூடும், 15 கோழியும், 5 கிலோ தீவனமும் வழங்கப்பட்டது.

### இயற்கையின் பரிசு

இயற்கையின் அழகை இறுதிவரை பார்த்து ரசிக்க வேண்டும் என்று கன்னியாகுமரி சேவை சங்கமும், பெஜான்சிங் கண் மருத்துவமனை மற்றும் நெட்டா சுய உதவிக் குழுவும் இணைந்து இலவச கண்மருத்துவ முகாம் மற்றும் கண்தானம் பற்றிய விழிப்புணர்வு முகாமை ஜனவரி 13 அன்று நெட்டா புனித தோமையார் ஆலயத்தில் நடத்தியது. நெட்டா ஆலய பங்குத்தந்தை நிகழ்வை தொடங்கி வைத்தார். பெஜான்சிங் மருத்துவமனைத் திட்ட அலுவலர் மற்றும் மாங்கோடு முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் கண்தானம் பற்றி விளக்கினார்கள். மொத்தம் 164 பேர் முகாமில் கலந்துகொண்டு மருத்துவ ஆலோசனை பெற்றனர்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்.

# அன்பின் சங்கமம்- மத நல்லிணக்க விழா

'மதங்கள் கைகோர்க்க; மனிதம் தழைக்க' என்னும் மையச் சிந்தனையுடன் நடைபெறும் மதநல்லிணக்க விழாவின் 17 ஆவது ஆண்டு விழா கூட்டம் தக்கலை சங்கமத்தில் தக்கலை மறைமாவட்ட ஆயரும், இயக்கத்தின் தலைவருமான மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரிமா இராதாகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செயலர் முனைவர் கிறிஸ்துதாஸ் சார்பில் திரு. எட்வின்சன் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். தக்கலை மறை மாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத் துப்பாடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இந்து சமயம் சார்பில் முன்னிலை வகித்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் கவிஞர் ஞா. அரங்கசாமி அவர்கள் கூறுகையில் அன்புதான் அனைத்திற்கும் ஊற்று. அதுவே புத்தர் கூற்று. இறைவன் என்னும் கடலில் சங்கமிப்பவை தான் மதங்கள் என்னும் நதிகள். ஆகவே அனைத்து மதங்களும் சங்கமிக்கும் இடம் ஒன்றே, அதை உணர்ந்து நாம் வாழ்வோம் என உரையாற்றினார். நூருல் இஸ்லாம் பல்கலைக்கழக துணை வேந்தர் திரு. எம்.எஸ் பைசல்கான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் தமது உரையில், நாம் எம்மதத்தவரா-யினும் நமது வழிபாடுகளும், மார்க்க சிந்தனைகளும் வீட்டுக்குள் இருக்க வேண்டும், வெளியில் 'நான் ஒரு இந்தியன் என்று மட்டுமல்ல நான் ஒரு மனிதன்' என்ற சிந்தனை தான் மேலோங்கி இருத்தல் வேண்டும். நமது செயல்பாடுகளும் ஏன் நாளைய இளையோரையும் அவ்வாறு தான் உருவாக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் அரிமா தங்கப்பன், கவிஞர் கரிக்ககம் ஸ்ரீகுமார், பஞ்சமி ராமச்சந்திரன் மற்றும் திரு. சங்கர நாரயணன் அய்யர் ஆகியோர் மத நல்லிணக்க கவிதைகளை அரங்கேற்றினார்கள். நிகழ்ச்சிகளை திரு ஜெயச்சந்திரன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தமது தலைமையுரையில் இவ்வியக்கத்தை உயரிய நோக்கத் துடன் உருவாக்கிய சீரோ மலபார் கத்தோலிக்க உயர் பேராயர் மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அத்தோடு தக்கலையில் நடைபெற்ற பகவத்கீதை கருத்தரங்கில் தாம் கலந்து கொண்டதையும், பிற மார்க்கங் களில் உள்ள கருத்துகளை அனைவரும் ஏற்றுக் கொண்டு வாழும்போது தான் சமத்துவ சமுதாயத்தை, தீவிரவாதமற்ற சமுதாயத்தை நம்மால் உருவாக்க இயலும், அதற்கான கருவிகளாக நாம் மாற இக்கூட்டமைப்பு வழிகோலட்டும் என உரையாற்றினார்.

இறுதியாக திரு. ஷாகுல் ஹமீது அவர்களின் நன்றியுரையுடனும், நாட்டுப்பண்ணுடனும் ஆண்டுவிழா நிறைவு பெற்றது.

பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ்,
செயலர்.

# வெள்ளிவிழா நிறைவில் ஆசீர் வித்யாலயா..

தெற்றியோடு ஆசீர் வித்யாலயா மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளி 'இருளிலிருந்து ஒளியை நோக்கி' என்னும் தனது கல்விப்பயணத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து, 2017 ஜனவரி 27, 28 ஆகிய நாட்களில் வெள்ளிவிழாவினை சிறப்பாக கொண்டாடியது.

**வெள்ளிவிழா நுழைவு வாயில் & கலையரங்கம் அர்ச்சிப்பு**

27 அன்று வெள்ளிவிழா நுழைவு வாயிலை தக்கலை எப்.சி.சி மாகாணத் தலைவி அருட்சகோ. சீலியா அவர்கள் திறந்து வைத்தார். பொன்விழா கலையரங்கை அருட்தந்தை ஜியோ சூழிக்குந்நேல் அவர்கள் அர்சித்து திறந்து வைத்தார். தொடர்ந்து 25 ஆண்டுகள் சீரும் சிறப்புமாக செயல்பட செய்த இறைவனுக்கு நன்றி திருப்பலி நாகர்கோவில் அல்போன்சா திருத்தல அதிபர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப் பறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் மாணவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது.

**வெள்ளிவிழா பொதுக்கூட்டம்**

வெள்ளிவிழா நிறைவு பொதுக் கூட்டமானது 28 மாலை 3.30 மணியளவில் ஆயர் அவர்களுக்கு ஆசீர் வித்யாலயா மாணவர்களின் வாத்திய மேளத்துடன் வரவேற்பு வழங்க, தமிழர் கலாச்சார முறைப்படி கும்ப ஆரத்தி எடுத்து வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து ஆசிரியர்களின் இறைவேண்டுதலோடு, தக்கலை மகாணத் தலைவி அருட்சகோ. சீலியா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தலைமையாசிரியை அருட்சகோ. மேரி டோம் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். எப்.சி.சி துறவற சபையின் உயர்மாகாண பொதுமன்ற தலைவி அருட்சகோ. லிசா மார்டின், குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், சங்னாச்சேரி மாகாணத் தலைவி அருட்சகோ. ஜியோமரியா, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. பிரம்ம நாயகம், குழித்துறை மறைமாவட்ட கத்தோலிக்கப் பள்ளி களின் தாளாளர் அருட்தந்தை சுரேஷ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஹெலன் டேவிட்சன், ஆசீர் வித்யாலயா நிறுவனர் அருட்சகோ. மரியா, பாத்திமா டிரேடர்ஸ் திரு. வர்க்கீஸ் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். பள்ளியின் வலைதளத்தை மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் தொடங்கி வைத்தார். ஆயர் அவர்கள் வெள்ளிவிழா மலரை வெளியிட்டு வெள்ளிவிழா உரையாற் றினார். சிறப்பாக பணிபுரிந்த ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டனர். மாணவர்களின் கலைநிகழ்சிகளும் இடம்பெற்றன. நிறைவில் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர் திரு கணேஷன் நன்றியுரை கூற நாட்டுப்பண்ணுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

அருட்சகோ. மேரி டோம்,
தலைமையாசிரியை.

# மறைவட்ட செய்திகள்

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

மஞ்சாலுமூடு சிறுமலர் குழந்தை தெரசாள் ஆலயத்தில் தாய்மார்களுக்காக 08.01.2017 அன்று திருப்பலியின் முக்கியத் துவம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் கருத்தரங்கை நடத்தினார்.

**முக்கூட்டுக்கல் திருக்குடும்ப திருவிழா**

06.01.17 முதல் 15.1.17 வரை 10 நாட்கள் நடைபெற்றது. ஜனவரி 6 அன்று மாலை 5 மணியளவில் பங்குத்தந்தை எபி அவர்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இரண்டாம் நாளன்று ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும், முதல் திருவிருந்து மற்றும் உறுதிபூசுதல் அரும் அடையாளங்களும் நடைபெற்றன. தொடர்ந்து அனுதினமும் திருப்பலி, செபமாலை, புகழ் மாலையும் நடைபெற்றன. நான்காம் திருவிழா முதல் ஏழாம் திருநாள் வரை நற்செய்திப் பெருவிழாவும், எட்டாம் நாள் செபமாலை திருப்பவனியும் நடைபெற்றன. ஒன்பதாம் திருநாளன்று இளைஞர் இயக்கத்தினரின் நாடகமும், பத்தாம் நாளன்று காலையில் இராசைத்திருப்பலியும், அன்பின் விருந்தும் நடைபெற்றன. மாலையில் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 16 அன்று இறந்தோருக்கான நினைவுத் திருப்பலியும் நடைபெற்றது.

## நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலம்**

**தனகா திருநாள்**

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் 5.1.17 மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் தனகா திருநாள் ஆரம்பமானது. தொடர்ந்து நற்கருணை ஆராதனையும், திருப்பலியும் நடைபெற்றது. உறவியம் வாரியாக இறைமக்கள் குடும்பமாக வந்து வாழைத்தண்டில் விளக்குகள் ஏற்றி (பிண்டி குத்தி) இறையாசீர் பெற்றுச் சென்றனர்

**திருத்தொண்டு வாரம்**

தனகா திருநாள் தொடங்கி வரும் ஒரு வாரத்தை திருத் தொண்டு வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நாட்களில் அனுதினமும் திருப்பலி மற்றும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

**பொங்கல் விழா**

பொங்கல் விழாவை முன்னிட்டு 16.1.2017 மதியம் 1 மணியளவில் மறைக்கல்வி மன்றம் சார்பில்



பொங்கலிட்டனர். தொடர்ந்து கருத்தரங்கும் நடைபெற்றது. கருத்தரங்கை அருட்சகோ. தீபா எஸ்.டி மற்றும் அருட்தந்தை ஜோஸ் வயலில் ஆகியோர் மிஷன் லீக் இயக்க துவக்கம், நோக்கம், மறைபரப்புப்பணி என்ற சிந்தனையில் கருத்துகளை பகிர்ந்தனர். பின்னர் பொங்கலை எ டு த் து க் கொ ா ண் டு தேங்காப்பட்டணம் கடற்கரை சென்று ரசித்து, ருசித்து சிறப்பாக கொண்டாடினர்.

**கருணை இல்லம் சந்திப்பு**

29.01.2017 அன்று நித்திரவிளை மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்டின் தியானத்தில் 35 மாணவர்கள் கலந்து கொண்டதோடு, கருணை இல்லம் சந்தித்து அவர்களோடு உரையாடி, சிறு தொகையையும் உதவியாக வழங்கினர்.



## சூசைபுரம் மறைவட்டம்

**நட்டாலம் தேவசகாயம் திருத்தலத்தில் சீரோ மலபார் திருப்பலி**

முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் பிள்ளை அவர்களின் பிறப்பிடமான நட்டாலத்தில் அமைந்துள்ள, திருத்தலத்தில், 2017, ஜனவரி 15 அன்று, சீரோ மலபார் திருப்பலியானது ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். இதன் ஏற்பாடுகளை சூசைபுரம் மறைவட்ட பங்குதந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் தலைமையில் செய்யப்பட்டன.

**பொங்கல் விழா**

சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் மற்றும் மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்திலும் பொங்கல் விழா நடைபெற்றது.

**கட்டிடம் புனரமைப்பு**

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய அலுவலகக் கட்டிடம் புனரமைப்பு செய்யப்பட்டது.

**உயர்கல்வியில்**

அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் சட்டப்படிப்பு தற்போது பயின்று வருகிறார்.

**பரிசு குலுக்கல்**

01.01.2017 அன்று பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இளைஞர்கள் நடத்தும் பரிசு குலுக்கல் நடைபெற்றது. 28.01.17 அன்று மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது.

**வீடு சந்தித்தல்**

மறைமாவட்டக் குழுவுடன் பங்குத்தந்தையும் இணைந்து

புனித வியாகப்பர் ஆலயத்தில் ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமையும் ஐந்தைந்து வீடுகள் சந்தித்து செபித்து வருகின்றனர்.

**பிறந்த நாள் விழா**

பாலப்பள்ளம் பங்குத்தந்தை பிரிண்டோ அவர்களின் பிறந்த நாள் விழா பங்குமக்கள் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதே போல் கிள்ளியூர் பங்குமக்கள் 01.02.2017 அன்று அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடினர்.

## படந்தாலுமூடு மறைவட்டம்

தமிழர் திருநாளான பொங்கல் விழா 16.01.2017 காலை 7 மணியளவில் அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில் காலைத் தொழுகையுடன் ஆரம்பமானது. மறைக்கல்வி மாணவிகள் கோலமிட்டனர். தொடர்ந்து மறை மாவட்ட இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் சச அவர்கள் தலைமையில் பறை முழங்க பொங்கலிடப்பட்டது. தொடர்ந்து தந்தை அவர்கள் விளையாட்டுகள் வழியாக பொங்கல் வாழ்த்துரை வழங்கினார். நிறைவில் பொங்கல் மற்றும் கரும்பு வழங்கப்பட்டது.



## செங்கோட்டைச் செய்திகள்

இளைஞர்கள் இறையன்பில் வளரவும், ஆன்மீக வாழ்விற்கு எழுச்சியூட்டும் வகையில் மங்காத சுடராய் குன்றாத இளமையாய் திகழவும் வேண்டும் என்ற சிந்தனையில் கிறிஸ்துபிறப்பை முன்னிட்டு செங்கோட்டை திருத்தொண்டு தள இளைஞர் அலகின் சார்பில் 'லிவ்விங் கிரிப்' மற்றும் 'மாறு வேடப் போட்டி' நிகழ்ச்சிகள் ஜனவரி 1 அன்று புதூர் புலரி மெட்ரிக் பள்ளி அரங்கில் நடைபெற்றது. இதற்காக அனைத்து பங்குதள மக்களும் பள்ளி அரங்கில் ஒன்றிணைய புனித ஜோசப் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை ரோணி அவர்கள் நிகழ்வை தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட இளைஞர் இயக்க இணை இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். இரு போட்டிகளிலும் புளியரை பங்கு முதலிடத்தை பெற்றது. செங்கோட்டை திருத்தொண்டுதள இளைஞர் இயக்கத்தின் பொறுப்பாளர் அருட்சகோதரி எமிலி அவர்கள் நன்றி கூறினார். பாப்பிறை பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது. அனைவருக்கும்

தேநீர் வழங்கப்பட்டது.

**சி. ஆர். ஐ கூடுகை**

ஜனவரி 7, 2017 அன்று முதன்முறையாக தக்கலையில் தொடங்கப்பட்ட சி. ஆர். ஐ கூடுகையில் செங்கோட்டைத் திருத்தொண்டுதளத்தின் அனைத்து துறவறசபைகளிலிருந்தும் அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர். அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தாக தெரிவித்தனர்.

**புதிய கட்டிடத் திறப்பு**

புளியரை சி.எம்.சி துறவற அருட்சகோதரிகள் நடத்தும் லிஸ்யூ கிளினிக்கின் புதிய கட்டிடத்தை அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் ஜனவரி 14 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல், அருட்தந்தை டோபின், சி.எம்.சி துறவற அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

**திருப்பணியாளர் கூட்டம்**

மேக்கரை, புதூர், வாஞ்சிநகர், புளியரை பங்குகளில் உள்ள திருப்பணியாளர்களின் கூட்டம் ஜனவரி 14 சனிக்கிழமை அன்று புளியரை ஆலயத்தில் இயக்குநர் அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. 14 திருப்பணியாளர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றனர். அருட்சகோதரி தியா சி.எம்.சி மற்றும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் ஆகியோர் இறையழைத்தல், திருப்பலி, திருச்சபை வரலாறு மற்றும் ஆளுமைப் பண்பு பற்றிய சிந்தனைகளில் காணொளிவழியாக வகுப்புகளை நடத்தினர். சி.எம்.சி அருட்சகோதரிகள் இல்லத்தில் நடைபெற்ற இரவுணக்குப்பின் செபமாலை, சிறப்பு ஆராதனை மற்றும் திருப்பலி நடைபெற்றன. தொடர்ந்து இரவு 12.30 மணிக்கு திருப்பயணம் ஆரம்பமானது. காலை 6.30 மணியளவில் அருவித்துறை ஆலயத்தில் வந்தடைந்து பின்னர் 8.30 மணியளவில் காலை உணவை முடித்து புனித அல்போன்சா கல்லறையில் செபித்தனர். பின்னர் குறவிலங்காடு, ராமபுரம், மாந்நானம், வடவாதூர் குருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் சென்று பார்வையிட்டு இரவு 10.30 மணியவில் திருப்பயணம் நிறைவு பெற்றது. இந்நிகழ்வை தலைமையேற்று நடத்திய அருட்தந்தை லிஜோ மற்றும் வழிகாட்டிய அருட்சகோ. ஷீனா ஆகியோர்களுக்கு நன்றி.

தகவல் சேகரிப்பு

திருமதி.ஹேமா | திருமதி.செலின் மேரி | திருமதி.ஸ்னேக லதா

# மறைமாவட்ட நிகழ்வுகளும் செய்திகளும்

**புதுப்பிக்கப்பட்ட பேணு புனித மரியன்னை ஆலயம் அர்ச்சிப்பு**

பேணுவில் அமைந்துள்ள, ஆலயமானது, பங்குதந்தை டேவிஸ் கருகப்பள்ளி சிஎம்ஐ மற்றும் பங்கு மக்களின் பெரும் முயற்சியின் பயனாக புதுப்பிக்கப்பட்டது. அதனுடைய அர்ச்சிப்பு விழாவானது, 01.01.2017 அன்று மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

**சி.ஆர்.ஐ அலகு தொடக்கம்**

சி.ஆர்.ஐ (Conference of Religious India) –யினுடைய தக்கலை மறைமாவட்ட அலகானது, 2017, ஜனவரி 7, அன்று தக்கலை சங்கமத்தில் தொடங்கப்பட்டது. தேசிய அளவில் செயல்படும் இவ்வமைப்பின், தக்கலை அலகின் தலைவி, அருட்சகோதரி சீலியா எப்.சி.சி (எப்.சி.சி. தக்கலை மண்டலத் தலைவி) அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தக்கலை மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் வாழ்த்துரை வழங்கினார். ஆயர் அவர்கள் தலைமையேற்று விழாவை சிறப்பித்தார். தக்கலை மறைமாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து துறவறத்தாரையும் ஒருங்கிணைத்து மேய்ப்புப் பணியையும் திருத்தொண்டுப் பணியையும் சிறப்புறச்செய்ய இவ்வலகு பெரிதும் உதவும்.

**சீரோ மலபார் ஆயர் பேரவை**

சீரோ மலபார் ஆயர் பேரவை, சபையின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள, காக்கனாடு, செண்ட் தோமஸ் மவுண்டில் வைத்து 2017, ஜனவரி 9-14 வரை நடைபெற்றது. சபையைச் சார்ந்த 52 ஆயர்கள் கலந்து கொண்டனர். சபையின் வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கும் பல்வேறு காரியங்கள் விவாதிக்கப்பட்டன.

**தமிழ்நாடு ஆயர் பேரவை கூட்டம்**

2017 ஜனவரி 18, 19 நாட்களில், ஒசூர், மாதா மலை தியான இல்லத்தில் வைத்து, தமிழ்நாடு ஆயர் பேரவைக் கூட்டமானது நடைபெற்றது. இப்பேரவையில் 18 இலத்தீன் மறைமாவட்டங்களின் ஆயர்களும், 3 கீழைத் திருச்சபை மறைமாவட்டங்களின் ஆயர்களும் கலந்து கொண்டனர்.

# இதர செய்திகள்

அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள், 2017 ஜனவரி 13 அன்று, மேய்புப்பணிக்காக இங்கிலாந்து சென்றார்.

மறைமாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு தமிழ்வழி கல்விக் கூடங்களில் ஆண்டுவிழாக்கள், 2017 ஜனவரி மாதத்தில் சிறப்பாக நடைபெற்றன.

களியல் ஆலயத்தின்

விரிவாக்கப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளது. தற்போது திருவழிபாடுகள் அனைத்தும் அருகாமையில் உள்ள சி.எம். சி. கன்னியர் இல்லத்தில் நடைபெறுகின்றன.

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களை சமூகத்தின் மைய நீரோட்டத்திற்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும். காரோடு டி.என்.என். இல்லமானது, பெருகி வரும் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

கருங்கல், சூசைபுரத்தில் அமைந்துள்ள நமது மறைமாவட்ட கல்லூரியில் பயிலும் மாணவியருக்கு உதவும் வகையில், எஸ்.எ.பி.எஸ் அருட்சகோதிரிகளால் விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதற்கான அடிக்கல், 2017 ஜனவரி 28 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது.

சூசைபுரம் மறை வட்டத்தைச் சேர்ந்த குருக்களுக்கான சிறப்பு கூட்டமானது, 2017, ஜனவரி 31 அன்று நடைபெற்றது.

## சீரோ–மலபார் சங்ஙனாச்சேரி உயர்மறைமாவட்டத்திற்கு துணை ஆயர்



கேரளாவின் சீரோ-மலபார் வழிபாட்டுமுறையின் சங்ஙனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக, அருட்பணி தாமஸ் தரயில் (Thomas Tharayil) அவர்களை, அவ்வழிபாட்டுமுறை ஆயர்கள் மாமன்றம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஒப்புதலோடு, ஜனவரி 14 சனிக்கிழமையன்று தேர்ந்தெடுத்துள்ளது.

1972 - ம் ஆண்டு, பிப்ரவரி 2ம் தேதி சங்ஙனாச்சேரியில் பிறந்த புதிய ஆயர், தாமஸ் தரயில் அவர்கள், 2000 - ம் ஆண்டில், அருள்பணியாளராக, திருப்பொழிவு செய்யப்பட்டார்.

உரோம் கிரகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகத்தில், உளவியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர், பல்வேறு இறையியல் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றி இருக்கின்றார். தற்போது ஆலப்புழா, புன்னப்பிறாவில் அமைந்துள்ள தெனகாலயாவில் இயக்குநராக பணியாற்றி வருகிறார்.

## Requirements for receving MESSAGES from the Major Archbishop

Prot.No. 00042/2017 09 January 2016

Since the requests for Messages of the Major Achbishop that Syro-Malabar Major Archiepiscopal Curia receives from Lay People, various Lay Associations, Priests, Consecreted Men and Women, Parishes, Institutes of Consecrated Life, Societies of Aplstolic Life, Secular Institutes, etc. are numerous, it has been decided to lay down certain regulations.

1. The request should reach the Major Archiepiscopal Curia at least two months before the deadline by which the message has to be ready. Requests received afted this time period will not be considered.
2. For lay people and lay assosiations, the request should be accompanied by a letter of recommendation of the Parish Priest and endorsed by the Bishop.
3. Requests from Priests should be accompanied by a letter of recommendation of the eparchial bishop.
4. Requests fromConsecrated Men and Women should be accompanied by a letter of recommendation of Provincial Superior.
5. The Major Archbishop does not write foreword for books. He may give only words of appreciation.
6. The Major Archbishop does not give messages for Supplements and similar common publications.
7. The message of the Major Archbishop given for a specific purpose should not be published elsewhere without special permission.

I take this opportunity to assure you that the Major Archiepiscopal Curia is always prompt in serving the Church and People of God.

Yours Sincerly,

Kollannur

Fr. Antony Kollannur,
Major Archiepiscopal Chancellor.

## BISHOP'S ENGAGEMENTS February 2017

| | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 10.30 am \| 03.00 pm | KKSSS: GB Meeting \| Meeting with Min seminary staff |
| 2 | Thu | 10.00 am | Amboori: Annual Day Celebration |
| 3 | Fri | 10.00 am \| 04.00 pm | Fr. Provincial \| Christurajapuram: School Annual Day |
| 4 | Sat | 03.00 pm \| 05.00 pm | Meet. Fr. Thadeus, Kottar \| Kulaseharam: School Day |
| 5 | Sun | 02.00 pm | Osanam: Pastoral visit |
| 6 | Mon | | Bishop's House \| Seminary: Conf. brothers |
| 7 | Tue | 05.00 pm | Shenkottai Mission visit |
| 8 | Wed | 09.30 am | Bishop's House: Curia Meeting |
| 9 | Thu | 04.00 pm \| 06.00 pm | Che.code: Qurbana \| P.moodu: Requiem Mass Fr. Philip |
| 10 | Fri | 10.00 am | St. Alphonsa College Symposium |
| 11 | Sat | 05.00 pm | Madurai: DB K Feast day Holy Qurbana |
| 12 | Sun | 09.30 am | Changanassery: Holy Qurbana at Laikadu |
| 13 | Mon | 11.30 am \| 04.00 pm | Manj: SDS Sisters Jubilee \| Visitors from Paris |
| 14 | Tue | 09.30 am | Visitors from Paris, Priests Conference |
| 15 | Wed | 04.00 pm | Mezhacode: School Day, Visitors from Paris |
| 16 | Thu | 11.00 am \| 02.30 pm<br>05.00 pm | Veli, TVM: Qurbana \| Pad. Inter-dept. Meeting<br>Lourdes, TVM: Feast day Holy Qurbana |
| 17 | Fri | | Kottayam >> Aluva: Seminary visit |
| 18 | Sat | 04.00 pm | Thodupuzha: Marriage Qurbana >> Idukki |
| 19 | Sun | 03.00 pm | Valiyathovala: Feast Day >> Angamaly |
| 20 | Mon | | Angamaly >> Bishop's House |
| 21 | Tue | | Bishop's House |
| 22 | Wed | 09.30 am | Nithravilai: Curia Meeting |
| 23 - 25 | Thu | | Bishop's House |
| 26 | Sun | 10.00 am<br>02.30 pm | Kanyakumari: Meeting with local Bishops \|<br>Arukani: KKSSS SHG Anniversary |
| 27 | Mon | 06.00 pm | Pallikonam: Ash Monday |
| 28 | Tue | | Bishop's House |

Fr. Thomas Sathianesan Eparchial Secretary,



FEAST

HOLY FAMILY, MUKKUTTUKAL



X'MAS

ST. MARTIN DE PORRES, KAZHUVANTHITTAI



MISSION

MISSION WEEK SOOSAIPURAM



BEST UNIT

MATRU JYOTHIS ANNIVERSARY



U.C.C. - CHRISTMAS



PASTORAL COUNCIL



C.R.I. INAUGURATION

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

**For Private Circulation only**

Published By : Fr. Joseph Santhosh, for the Diocese of Thuckalay
Bishop's House, Post Box No . 12, Thuckalay - 629 175

Printed at : Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570